# குடியியற் கல்வி

# பாடத்திட்டம்

# தரம் 9

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கானது)**

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**

**குடியியற் கல்வி**

தரம் - 9

பாடத்திட்டம்

முதற் பதிப்பு: 2017

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN ......

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***அச்சுப் பதிப்பு :***
***அச்சகம்***
***தேசிய கல்வி நிறுவகம்***
***மகரகம***

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | iii |
| தேசிய இலக்குகள் | iv |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | v - vi |
| குடியியற்கல்வி தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள் | vii |
| தேசிய இலக்குகள் மற்றும பாடக்குறிக்கோள்களுக்கிடையிலான தொடர்பு | viii |
| தரம் 9 இற்கான பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம் | ix |
| பாடத்திட்டம் | 1 - 38 |
| கற்றல் கற்பித்தல் முறையில் | 39 - 40 |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 40 - 42 |
| கணிப்பீடும் மதிப்பீடும் | 42 |
| பாடத்திட்ட கலைத்திட்டக்குழு | 43 |

# அறிமுகம்

குடியியற் கல்வி எனும் பாடத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகஞ் செய்வதன் முக்கிய நோக்கம் இலங்கையில் நிலைபேறான சமாதானத்தை நிலைநிறுத்துவதாகம். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் என்றவாறாக பல்வேறு இனங்களாகவோ பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர், கிறிஸ்த்தவர், இஸ்லாமியர் என்றவாறாக பல்வேறு சமயப் பிரிவினராகவோ பிரிந்து இருப்பதை விட சகல இன, சகல சமயங்களைச் சேர்ந்த மக்களும் எவ்வித பேதங்களுமின்றி இலங்கை மாதாவின் பிள்ளைகளாக, ஒற்றுமையாக, சமத்துவமாக, அமைதியாக, சகவாழ்வு வாழ்வதே சமாதானத்தை மதிக்கும் ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்பாகும். நிலைபேறான சமாதானத்தை நிலைநிறுவத்துவதற்காக தமது குடும்பம் தொடக்கம் உலகளாவிய அகிலக் குடும்பம் வரையில் எனும் கருப்பொருளின் கீழ் பிரதான 12 பாடக் குறிக்கோள்கள் மற்றும் 20 பிரதான பாடத்தேர்ச்சிகளின் கீழ் குடியியற் கல்விப் பாடமானது 6 ஆந் தரம் தொடக்கம் 11 ஆந் தரம் வரையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

6 - 9 ஆந் தரங்களில் ஒரு கட்டாயப்பாடமாகவும், 10 - 11 ஆந் தரங்களில் முதலாம் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு தேர்வுப் பாடமாகவும் நடைமுறைப்படுத்தப்படும். குடியியற் கல்விப் பாடத்தின்கீழ் 9 ஆந் தரத்துக்குரிய பாடத்திட்டம் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்பு, சமகால மாற்றங்கள், சனநாயக ஆட்சி, உள்ளூராட்சி நிறுவனங்கள், முரண்பாடு தீர்த்தல், வேலையுலகு ஆகிய பிரதானமான ஆறு (06) தலைப்புக்களின் கீழ் நாட்டுப் பிள்ளைகளை நற்பிரசைகளாகச் சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்வதே இத்தரத்தில் இப்பாடத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

6 ஆந் தரம் தொடக்கம் வெவ்வேறு தலைப்புக்களின்கீழ் பிரசைகளின் அறிவு, பிரசைகளின் மனப்பாங்குகள், பிரசைகளின் திறன்கள் ஆகியவற்றை விருத்தி செய்து, பிரசைகளுக்குரிய கருமங்களில் ஈடுபடும் பிள்ளைகளை மேலும் முன்னோக்கி இட்டுச் சென்று இலங்கைக்கும் உலக மக்கட் சமூகத்துக்கும் பொருத்தமான நற்பிரசையை உருவாக்கும் பணியில், 9 ஆந் தரத்துக்குரிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், விடய உள்ளடக்கங்கள் மற்றும் கற்றற் பேறுகளும் மிக முக்கியமானவை என்பது கவனத்திற் கொள்ளப்படுவதாகும்.

ஒற்றுமை, சகவாழ்வு, மீள் இணக்கப்பாடு ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் நிலைபேறான சமாதானத்தை எட்டுவதற்காக நடைபோடும் பயணத்தின்போது குடியியற் கல்விப் பாடத்தினால் ஆற்றத்தக்க சமூகப் பணி அளப்பரியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இந்த இலக்கை அடைவது தொடர்பான உங்களது கவனஞ் ஈர்க்கும் எனவும் அதற்காக பூரண ஒத்துழைப்பும் பங்களிப்பும் கிடைக்கும் எனவும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

(i). மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

(ii). மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

(iii). மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

(iv). ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

(v). நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

(vi). தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(vii). தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

(viii). நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

(i). தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

(ii). ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

(iii). சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

(iV) வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

(V) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

(Vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

(Vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## குடியியற்கல்வி
## தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள்

1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல்.
2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல்.
3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல்.
4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல்.
5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல்.
6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும்.
8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்கு தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.
9. பல்வேறு பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும்.
10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
11. இலங்கைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்
12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

## தேசிய பொது இலக்குகளுக்கும் பாட குறிக்கோள்களுக்குமான தொடர்பு

| பாட குறிக்கோள்கள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
| 1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல். | | √ | | | | | | |
| 2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல். | | | | | √ | | | |
| 3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல். | | | | | | | | √ |
| 4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல். | | | | | | | √ | |
| 5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானுடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல். | √ | | | | | | | |
| 6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல். | | | √ | | | | | |
| 7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும். | | | | | | | √ | |
| 8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்கு தொடர்பான விளக்கத்தை வழங்குதல். | | | | | | | | √ |
| 9. பல்வேறு பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும். | | | | | | √ | | |
| 10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல். | | | | | √ | | | |
| 11. இலங்கைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் | √ | | | | | | | |
| 12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல். | | | | √ | | | | |

## தரம் 9 இற்கான பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளைகள் | தேர்ச்சி மட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தவணை 1 | 9.1 | 9.1.1, 9.1.2 | 08 | 02 |
| | 9.2 | 9.2.1, 9.2.2, 9.2.3, 9.2.4, 9.2.5, 9.2.6 | 12 | 06 |
| தவணை 2 | 9.3 | 9.3.1, 9.3.2, 9.3.3, 9.3.4, 9.3.5, 9.3.6 | 12 | 06 |
| | 9.4 | 9.4.1, 9.4.2, 9.4.3, 9.4.4, 9.4.5 | 08 | 05 |
| தவணை 3 | 9.5 | 9.5.1, 9.5.2, 9.5.3 | 06 | 03 |
| | 9.6 | 9.6.1, 9.6.2, 9.6.3, 9.6.4, 9.6.5, 9.6.6, 9.6.7, 9.6.8, 9.6.9, 9.6.10, 9.6.11, 9.6.12, 9.6.13 | 14 | 13 |

# குடியியற்கல்வி

## தரம் - 9

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சமூகப் பாதுகாப்பு**<br>9.1<br>சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக செயல் ரீதியில் பங்களிப்பார். | 9.1.1<br>சமூகப் பாதுகாப்புக்காக தனியாளின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவு செய்வார். | • சமூகப்பாதுகாப்பு<br>• சமூகம் வரையறுத்தல்<br>• சமூகத்துக்கும் தனியாளுக்கும் இடையிலான தொடர்பு<br>• சமூகப்பாதுகாப்பு - அறிமுகம்<br>• சமூகப்பாதுகாப்புக்காகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களும் அந்நிறுவனங்கள் ஆற்றும் பணிகளும்<br>- குடும்பம்<br>- பாடசாலை<br>- சமய நிறுவனங்கள்<br>- சமூக நிறுவனங்கள்<br>• மதுபானம், போதைப் பொருள் பயன்பாடு, ஏனைய ஒழுக்கக்கேடான செயல்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது தொடர்பாக தனியாள்களதும் நிறுவனங்களதும் பொறுப்புக் களும் கடமைகளும்<br>• சமூக பாதுகாப்பிற்கான சட்டங்கள்<br>• சட்டம் - அறிமுகம்<br>• சட்டத்தின் இயல்புகள்<br>• சட்ட மூலாதாரங்கள் | • சமூகம் என்பதை வரை யறுப்பார்<br>• சமூகப்பாதுகாப்பு என் பதை விளக்குவார்.<br>• சமூகப்பாதுகாப்பு மீது பங் களிப்புச் செய்யும் நிறுவ னங்களையும் அவற்றின் பொறுப்புக்களையும் அட்டவணைப்படுத்துவார்.<br>• மதுபானம், போதைப் பொருள் பயன்பாடு, ஏனைய ஒழுக்கக்கேடான செயல்கள் போன்ற வற்றைத் தவிர்ப்பது சமூக கடமையாகும் என்பதை விளக்குவார்.<br>• சமூகப்பாதுகாப்புக்காக நீதிமன்றினால் ஆற்றப் படும் சேவைகளை மதித் துக் கருத்துத் தெரிவிப் பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | • சட்ட வகைகள்<br>  • **சுதேச சட்டம்**<br>    ★ அரசியலமைப்புச்சட்டம்<br>    ★ குற்றவியல் சட்டம்<br>    ★ குடியுரிமைச்சட்டம்<br>• சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள்<br>  • நீதிமன்றம்<br>    ★ உச்ச நீதிமன்றம்<br>    ★ மேன்முறையீட்டு நீதிமன்றம்<br>    ★ மாகாண உயர் நீதிமன்றம்<br>    ★ உயர் நீதிமன்றம்<br>    ★ மாவட்ட நீதிமன்றம்<br>    ★ நீதவான் மீதிமன்றம்<br>• பொலிசு<br>• சட்டமா அதிபர் திணைக்களம்<br>• அரச இரசாயனப் பரிசோதகர் திணைக்களம்<br>• சிறைச்சாலைகள் திணைக்களம்<br>• பாதுகாப்புப்படைகள்<br>• **சருவதேச சட்டம்** | • சமூகப்பாதுகாப்புக்கான சட்டங்களை விவரிப்பார்.<br>• சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் பங்களிப்புச் செய்யும் வெவ்வேறு நிறு வனங்கள் பற்றி விவரிப் பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.1.2<br>சமூகப்பாதுகாப்புக்காகப் பங்களிப்புச் செய்யும் பல்வேறு நிறுவனங்க ளுடன் மகத்துவம் மிக்க ஒரு பிரசையாக ஒத்து ழைத்துச் செயற்படுவார். | • சமூகப்பாதுகாப்பை ஏற்படுத்து வதற்காகப் பிரயோகிக்கப் பட்டுள்ள பொறிமுறைகள், சட்டதிட்டங்களுடன் தொடர்பு டைய தனியாட் பொறுப்புக்கள்<br>• அரசியலமைப்பும் ஏனைய சட்டதிட்டங்களும்<br>• நீதிமன்றம்<br>• பொலிசு<br>• பாதுகாப்புப்படைகள்<br>• இணக்க சபைகள்<br>• தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை<br>• மனித உரிமைகள் ஆணைக்குழு | • அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டதிட் டங்களைப்பின்பற்றுவதன் அவசியத்தை விளக்கு வார்.<br>• நீதியை நிலைநிறுத்துவ தற்காக நீதிமன்றின் செயன்முறைக்கு ஒத்து ழைப்பு வழங்குவதன் அவ சியத்தை விளக்குவார்.<br>• சட்டத்தையும் அமைதி யையும் (ஒழுங்கையும்) பாதுகாப்பதற்காக பொலி சாருக்கு உதவி புரிதல் தொடர்பாக பிரசையின் பொறுப்புக்களை மதிப் பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | • தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகச் செயற்படும் முப்படைகளுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதன் முக்கியத்தை மதிப்பார்<br>• சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக இணக்கசபைச் செயன்முறையுடன் பங்களிப்புச் செய்வதன் முக்கித்துவம் வழி விவரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| **சமகால மாற்றங்கள்**<br>9.2<br>சமூகத்தின் நன்மையில் பங்களிப்புச் செய்யும் தொழினுட்ப, பொருளாதார, சமூக மாற்றங்களுடன் இசைவடைந்து செயற்படுவார். | 9.2.1<br>சமகால மாற்றங்கள் தனியாள், சமூக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் விதத்தை நுணுகியாய்வார். | • தொழினுட்ப மாற்றங்களும் அவற்றுக்காகக் காட்டும் துலங்கல்களின் முக்கியத்துவமும்<br>• தொழினுட்ப மாற்றங்கள் - அறிமுகம்<br>• பல்வேறு தேடல்கள், ஆராய்ச்சிகள் மூலம் உருவாகும் புதிய கண்டுபிடிப்புக்கள்<br>• தொழினுட்ப மாற்றங்கள் காரணமாக கூடவே ஏற்படும் சமூக மாற்றங்கள்<br>• ஆக்கபூர்வமான ஒரு பிரசை என்ற வகையில் தொழினுட்ப மாற்றங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்<br>• பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் | • தொழினுட்ப மாற்றங்களை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• தேடல்களும் ஆராய்ச்சிகளும் புதிய கண்டுபிடிப்புக்கள் மீது பங்களிப்புச் செய்யும் என்பதை விளக்குவார்.<br>• தொழினுட்ப மாற்றங்கள், சமூக மாற்றங்கள்மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விவரிப்பார்.<br>• பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்தி, பௌதிக, மனித வளங்களின் மூலம் உச்ச பயன் பெறத்தக்கவிதத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• பேண்தகு அபிவிருத்திக்காகப் பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்துவன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2.2<br>பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுடன் இசைவடைந்து செயற்படுவார். | • பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள்<br>  • விவசாயத் துறை<br>  • கைத்தொழில் துறை<br>  • சேவைத்துறை<br>• பொருளாதாரத்தில் நிகழும் வெவ்வேறு மாற்றங்கள் தனியாள் மீதும் சமூகம் மீதும் செலுத்தும் செல்வாக்கு<br>• பொருளாதாரத்தில் ஏற்படும் சமகால மாற்றங்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதல். | • பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளில் நிகழும் சமகால மாற்றங்களை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• பொருளாதாரத்தில் நிகழும் பல்வேறு மாற்றங்கள் காரணமாக ஏற்படும் தனியாள், சமூகத் தாக்கங்களைப் பகுத்தாய்வார்.<br>• பொருளாதாரத்தில் நிகழும் சமகால மாற்றங்களுக்கு இசைவடைவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2.3<br>தொழிற்சந்தையுடன் இணைந்த புதிய போக்குகளைத் தேடியாய் வார். | • தொழிற்சந்தையுடன் இணைந்த புதிய போக்குகளை இனங் காணல்<br>• புதியபோக்குகளின் வழியே உருவாகும் தொழில்வாய்ப்புக்கள் | • தொழிற்சந்தையுடன் இணைந்த புதிய போக்கு களை விவரிப்பார்.<br>• புதிய தொழில் வாய்ப்புக் களுக்காக நிறைவு செய்து கொள்ள வேண்டிய தகை மைகள் குறித்துக் கலந்து கொள்வார். | 02 |
| | 9.2.4<br>போட்டா போட்டி நிலவும் உலகில் சகவாழ்வுக்குரிய இயல்புகளுடன் விருத்தி செய்த வாறு சகவாழ்வு வாழ்வார். | • நல்வாழ்வு வரையறுத்தல்<br>• நல்வாழ்வின் முக்கியத்துவம்<br>  • சமூகத்தின் சீரான இருப்புக் காக தனியாட்களின் விருப்புக் களின் பல்வகைமை<br>  • வாழ்க்கைக் கோலம் சிக்கலா னதாக இருத்தல்<br>  • தார்மீகத்தன்மை<br>  • நியாயங்காத்தல்<br>  • சமாதானம் | • போட்டா போட்டி நிலவும் உலகில் சகவாழ்வின் அவ சியத்தை உதாரணங்களு டன் எடுத்துக் காட்டுவார்.<br>• நல்வாழ்வுடன் செயற்படா மையால் ஏற்படும் விளை வுகளை விளக்குவார்.<br>• நல்வாழ்வானது சமூகத் தின் நல்ல இருப்பு மீது செல்வாக்கு செலுத்தும் விதத்தை விளக்குவார்.<br>• நல்வாழ்வு இயல்புகளை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • சகவாழ்வுப் பண்புகள்<br>• தார்மீக வாழ்வு<br>• மகிழ்ச்சியுடன் இருத்தல்<br>• கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல்<br>• எளிமையாள வாழ்க்கை<br>• சகவாழ்வு - வரையறுத்தல்<br>• சகவாழ்வின் முக்கியத்துவம்<br>• சகவாழ்வு - இயல்புகள்<br>• ஒத்துழைத்துச் செயற்படல்<br>• ஏனையோரை மதித்தல்<br>• பகிர்ந்து பரிமாறிக் கொள்ளல்<br>• பரஸ்பர நம்பிக்கை<br>• நட்பு<br>• சகவாழ்வுப் பண்புகளை வாழ்க்கையுடன் பொருந்தியமைத்துக் கொள்வதன் முக்கியத்துவம்<br>• நல்வாழ்வும், சகவாழ்வும் தனியாளினதும் சமூகத்தினதும் அபிவிருத்திக்கு இன்றியமையாதவை | • நல்வாழ்வுப் பண்புகளை வாழ்க்கையுடன் தொடர்பு படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தை முன்மொழிவார்.<br>• சகவாழ்வு என்பதை வரையறுப்பார்.<br>• சகவாழ்வுப் பண்புகளை விவரிப்பார்.<br>• சமூகத்தின் இருப்புக்குச் சகவாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• நல்வாழ்வு மற்றும் சகவாழ்வுப் பண்புகள் தனியாளினதும் சமூகத்தினதும் விருத்திக்கு முக்கியத்துவம் பெறும் விதத்தைக் கலந்துரையாடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2.5<br>கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சகவாழ்வு வாழும் பிரசையாகச் செயற்படுவார். | • கூட்டுறவு இயக்கம் - அறிமுகம்<br>• கூட்டுறவு இயக்கத்தின் தற்போதைய பணிகள்<br>• கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள்கள்<br>• பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களும் | • கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள்களையும் பொறுப்புக்களையும் விளக்குவார்.<br>• பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியத்தைக் கலந்துரையாடுவார். | 02 |
| | 9.2.6<br>சுதேசத்துவத்தைக் காத்து அகிலக் கிராமத்தின் உறுப்பினராகச் செயற்படுவார். | • உலகம் தொடர்பான பரந்த நோக்கு<br>• சுதேசத்துவத்தை பொருளுள்ள வகையில் மதித்தல்<br>★ சுதேச பண்பாடு<br>★ சுதேச உற்பத்தி<br>★ சுதேசத்துக்கு உரித்தானவை<br>உதா: தாவரங்கள், விலங்குகள், ஔசதங்கள்<br>• சுதேச சட்டகத்துக்கு அப்பால் சென்று, ஏனைய பண்பாடுகளை இனங்காணலும் அவற்றின் ஊடாகக் கற்றலும் | • சுதேசத்துவத்தைப் பொருள் உள்ள வகையில் மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• சுதேசத்துவத்தைப் பேணுவதற்காகப் பங்களிப்புச் செய்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• சுதேசத்துவத்தைப் பேணியவாறு அகிலக்கிராமத்தின் உறுப்பினராகச் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பூகோள ரீதியில் சகவாழ்வு செயற்படும் விதத்தை இனங் காணல்<br>• பரஸ்பர சார்ந்திருப்பு<br>★ எந்தவொரு தனியாளுக்கும், மக்களினத்துக்கும் நாட்டுக்கும் உலகில் தனித்து இருக்க முடியாது என்பது | செயற்படுவதன் முக்கியத் துவத்தை கலந்துரையாடுவார்.<br>• பரஸ்பர சாந்திப்பு மூலம் பூகோள ரீதியில் சகவாழ்வு செயற்படும் விதத்தை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சனநாயக ஆட்சி**<br>9.3<br>சனநாயகச் சமூகமொன் றில் ஒரு நற்பிரசையாகச் செயற்படுவார். | 9.3.1<br>சனநாயக ஆட்சி முறை யொன்றின் அடிப்படையான அம்சங்களைப் பகுத்தாய்வார். | • சனநாயகம் - வரையறுத்தல்<br>• சனநாயக ஆட்சிமுறையொன் றின் அடிப்படை இயல்புகள்<br>• சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்குத் தேவையான அம்சங்கள்<br>• சனநாயக ஆட்சிமுறை காணப் படும் நாடுகள் - உதாரணங்கள் | • சனநாயகம் எனும் எண் ணக்கருவை எளிமையாக வரையறுப்பார்.<br>• சனநாயக நிருவாக முறை யொன்றின் அடிப்படை இயல்புகளைக் கலந்துரை யாடுவார்.<br>• சனநாயக நிருவாக முறை யொன்றின் வெற்றிக்குத் தேவையான அம்சங்கள் தொடர்பாக மதித்துச் செயற்படுவார். | 02 |
| | 9.3.2<br>சனநாயகச் சமூகமொன்றின் பிரசையொருவரின் உரிமை களுடன் இணைந்த கடமை களை நுணுகியாய்வார். | • சனநாயகச் சமூகமொன்றில் பிரசையொருவரின் உரிமைகள்<br>• பிரசையொருவரின் உரிமைக ளுடன் இணைந்த கடமைகளும் பொறுப்புக்களும்<br>• சட்டரீதியான சட்டகத்தினுள் உரி மைகளை அனுபவிப்பதன் முக் கியத்துவம் | • சனநாயக ஆட்சிமுறை யொன்று காணப்படும் நாட்டின் உரிமைகளை விளக்குவார்.<br>• சட்டரீதியான சட்டகத்தி னுள் உரிமைகளை அனு பவித்தலானது தனியான தும் சமூகத்தினதும் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | அபிவிருத்திக்குக் காரண மாகும் என்பதை விளக்கு வார்.<br>• ஒரு பிரசை என்ற வகை யில் கடமைகளைத் தவ றாது நிறைவேற்றுதலா னது உரிமைகள் பாது காக்கப்படுதற்கு இன்றிய மையாதது என்பதைக் கலந்துரையாடுக. | |
| | 9.3.3<br>மக்கட் சமூகமொன்றில் ஐக்கி யத்தை ஏற்படுத்துவதற்காக, அரசியற் கட்சிகள் ஆற்றும் பணிகளை மதிப்பார். | • அரசியற்கட்சிகள்<br>• அரசியல் கட்சிகள் - வரை யறுத்தல்<br>• சனநாயக ஆட்சிமுறையில் காணப்படும் கட்சி முறைகள்<br>• மக்கட் சமூகத்தில் ஐக்கி யத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் கட்சிகள் ஆற்ற வேண்டிய பணிகள் | • அரசியல் கட்சி என்பதை சுருக்கமாக வரையறுப் பார்.<br>• சமூகமொன்றின் ஒற்றுமை யைக் கட்டியெழுப்புவ தற்காக அரசியலாட்சிகள் மூலம் ஆற்றவேணடிய பொறுப்புக்களை மதித் துக் கருத்துத் தெரிவிப் பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3.4<br>சனநாயக சமூகமொன் தேர்தல்கள் மற்றும் வாக்குரிமை பற்றித் தேடியறிவார். | • வாக்குரிமையும் தேர்தல்களும்<br>• ஆட்சியில் மக்கள் பங்கு கொள்ளும் சந்தர்ப்பங்கள்<br>• சர்வசன வாக்குரிமையும் அதன் முக்கியத்துவமும்<br>• தேர்தல்களும், தேர்தல் தொடர்பாக மக்களின் கடமைகளும் பொறுப்புக்களும் | • பொதுமக்கள் ஆட்சியில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.<br>• வர்வசன வாக்குரிமையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.<br>• தேர்தலொன்றின்போது வாக்காளர் என்ற வகையிலும் வேட்பாளர் என்ற வகையிலும் கிடைக்கும் உரிமைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.<br>• தேர்தல்கள் தொடர்பாகத் தமது கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3.5<br>சனநாயகப் பிரசை என்ற வகையில் தேவைப்படும் போது உறுதிப்பாட்டுடன்(Assertiveness) செயற்படுவார். | • உறுதிப்பாடு (Assertiveness) வரையறுத்தல்<br>• உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்காக ஒருவர் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டிய பண்புகள்<br>- தளராமை<br>- மென்மையான தன்மை<br>- நேர்மை<br>- மதிப்பளித்தல்<br>- செவிமடுத்தல்<br>• தம்முடன் உறுதிப்பாடு<br>• ஏனையோருடன் உறுதிப்பாடு<br>• தமது உணர்வுகளை, தேவையான வேளைகளில், தேவையானவாறும் சமயோசிதமாக, ஒழுக்கம் பேணி வெளியிடல்<br>• உடன்பாடான மனப்பாங்குகளுடன் பகுத்தறிவுடன் நேரிய கொள்கை வழி நின்று செயற்படல் | • உறுதிப்பாடு என்பதை விளக்குவார்.<br>• தனிப்பட்ட வாழ்க்கையில் உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• பரஸ்பரம் ஒருவரோடொருவர் செயற்படும்போது உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.<br>• தம்மிடத்தே உறுதிப்பாட்டைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்காக பண்புகளை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3.6<br>சனநாயகப் பிரசை என்ற வகையில், நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவார். | • நாட்டைக் கட்டியெழுப்புதல்<br>• நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒரு கொள்கையின் முக்கியத்துவம்<br>• நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக தமது பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்குவதன் முக்கியத்துவம்<br>• ஒரு பிரசை என்ற வகையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்<br>உ-ம்:<br>- தாம் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவறாது நிறைவேற்றுதல் பொறுப்பேற்றல்<br>- சமூகத்திலிருந்து தமக்கு கிடைப்பவற்றை விட சமூகத்துக்கு தாம் வழங்க வேண்டிய பங்களிப்பு தொடர்பான விளக்கத்துடன் செயற்படல் | • நாட்டைக் கட்டியெழுப்புதல் எனும் எண்ணக்கருவை விளக்குவார்.<br>• நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக தேசியக் கொள்கையொன்றின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• ஒரு பிரசை என்ற வகையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிவார்.<br>• நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது ஒவ்வொரு பிரசையினதும் கடமையாகும் என்பதை மகத்துவத்துடன் கலந்துரையாடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - ஓர் இலங்கையர் என்ற வகையில் தேசிய ஒற்றுமையையும் ஒழுங்கையும் (அமைதியையும்) கட்டியெழுப்புவதற்காகப் பங்களிப்புச் செய்தல். | • இலங்கையர் என்ற வகையில் தேசிய ஒற்றுமையையும் ஒழுங்கையும் (அமைதியையும்) கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் அவசியத்தை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **உள்ளூராட்சி நிறுவனங்கள்** 9.4 பொது நன்மைக்கு ஏதுவாகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகளுக்கு ஆதரவு வழங்கு வார். | 9.4.1 உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைப்பை தேடியாய்வார். | • உள்ளூராட்சி - அறிமுகம்<br>• உள்ளூராட்சி நிறுவனங்களின் முக்கியத்துவம்<br>• உள்ளூராட்சியின் வரலாற்றுப் பின்னணி<br>• உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பு | • உள்ளூராட்சி என்பதை விளக்குவார்.<br>• உள்ளூராட்சி நிறுவனங் களின் முக்கியத்தவத்தை/ அவசியத்தை விவரிப்பார்.<br>• உள்ளூராட்சியின் வரலாற்று வளர்ச்சியைத் தேடியாய்வார்.<br>• உள்ளூராட்சி நிறுவங்க ளின் ஒழுங்கமைப்புக்கட் டமைப்பை அட்டவணை கள் (Charts) மூலம் விளக்குவார்.<br>• தமது பிரதேசத்தில் உள்ளடங்கும் உள்ளூ ராட்சி நிறுவனத்தைக் குறிப்பிடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.4.2<br>உள்ளூராட்சி நிறுவனங்களால் தமது பிரதேசத்துக்கு ஆற்றப் படும் சேவைகளை தேடியாய் வார். | • உள்ளூராட்சி நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள்<br>உதாரணம்:<br>- சுகாதாரமும் உடநலமும்<br>- கழிவுப்பொருள் முகாமை<br>- நூலகங்கள், வாசிகசாலைகள்<br>- முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்கள்<br>- பொதுச்சந்தையை நடத்திச் செல்லல் | • உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.<br>• மக்களின் வாழ்க்கையின் நன்மைக்காக உள்ளூராட்சி நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 02 |
| | 9.4.3<br>உள்ளூராட்சி நிறுவனங்களது சேவைகளுடன் தொடர்புடைய பொதுமக்கட் கடமைகளை நிறைவேற்றுவார். | • உள்ளூராட்சி நிறுவனங்களது சேவைகளுடன் தொடர்புடைய பொதுமக்களின் கடமைகள்<br>உதா:<br>- வரிப்பணம் செலுத்துதல்<br>- உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு உதவுதல் | • உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகத் தமது கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• வேலைகளைப் பெறுவோர் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுதலானது அச் சேவைகளை வினைத் திறனுள்ளவாறு பேணி வரத்துணையாகும் விதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.4.4<br>உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சேவைகளை வினைத்திறனுடன் ஆற்றுவதன் அவசியத்தை மதிப்பார். | • உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சேவைள் வினைத்திறனுடன் நிகழுவதற்காக ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்<br>- மக்கட் பிரதிநிதிகளது<br>- அதிகாரிகளது | • உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சேவைகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்காக, மக்கட் பிரதிநிதிகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் விளக்குவார்.<br>• உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சேவைகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புக்களை உதாரணங்காட்டி விவரிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.4.5<br>உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் தேசிய அபிவிருத்திக்காக வழங்கப்படும் பங்களிப்பைத் தேடியாய்வார். | • பிரதேசத்தின் தேவைகளை இனங்காணல்<br>• பிரதேச அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களை வகுத்தல்<br>• அத்திட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்தல்<br>• பிரதேச தலைவர்களை உருவாக்குதல் | • உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் பங்களிப்பை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• பிரதேச அபிவிருத்தியின் ஊடாக தேசிய அபிவிருத்தித் தேவையான திட்டங்களை வகுப்பதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **முரண்பாடு தீர்வு**<br>9.5<br>முரண்பாடு தீர்த்தலுக்குத் தேவையான தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார். | 9.5.1<br>முரண்பாடுகள் தொடர்பாக பகுத்தாய்வார். | • முரண்பாடு - வரைவிலக்கணம்<br>  • முரண்பாடுகளுக் குரிய காரணங்கள்<br>  • முரண்பாடுகளின் தன்மைகள்<br>  • முரண்பாடு - பகுத்தாய்தல் | • முரண்பாடு என்பதை வரைவிலக்கணப்படுத்து வார்.<br>• முரண்பாடுகளுக்காக காரணங்களைப் பகுத் தாய்வார்.<br>• முரண்பாடுகளின் தன்மை யைக் கலந்துரையாடு வார்.<br>• முரண்பாடு வகைகளை விபரிப்பார். | 02 |
| | 9.5.2<br>முரண்பாடு தீர்ப்பதற்காக பொருத்தமான முறையியல் களை அனுசரிப்பார். | • முரண்பாடு தீர்த்தலில் எதிர்நோக் கப்படும் தடங்கல்கள்<br>உ-ம்:<br>- இறுக்கமான நிலைப்பாடு<br>- ஒரு குறித்த தீர்வில் மாத்திரம் நிலைத்திருத்தல்<br>- மற்றைய தரப்பைத் தோற் கடித்து தாம் வெற்றிகொள்ள நினைத்தல்<br>• முரண்பாடு தீர்த்தலுக்குத் தேவை யான நற்பண்புகள்<br>• முரண்பாடு தீர்வு முறையியல்கள் | • முரண்பாடு தீர்த்தலின் போது தோன்றும் தடங்கல் களை விளக்குவார்.<br>• முரண்பாடு தீர்த்தலுக்குத் தேவையான பண்புக ளைக் கலந்துரையாடு வார்.<br>• முரண்பாடு தீர்த்தல் முறைகளை விபரிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.5.3<br>முரண்பாடுகளை உடன்பாடான வாறு தீர்ப்பார். | • முரண்பாடுகளை உடன்பாடான வாறு தீர்ப்பதன் அனுகூலங்கள்<br>• சமாதானம் நிலைநிறுத்தப் படுதல்<br>• வளவீண்விரயம் இழிவாதல்<br>• நம்பிக்கை கட்டியெழுப்பப் படுதல்<br>• முரண்பாடுகளை உடன்பாடான வகையில் தீர்த்துக்கொள்ளாமை யின் விபரீதங்கள் | • முரண்பாடுகளை உடன் பாடானவாறு தீர்த்துக் கொள்வதன் அனுகூலங்க ளைக் கலந்துரையாடு வார்.<br>• முரண்பாடுகளை உடன் பாடான வகையில் தீர்த் துக் கொள்ளாமையால் ஏற்படத்தக்க விபரீதங் களை விபரிப்பார். | 02 |
| **வேலை உலகு**<br>9.6 வேலை உலகுக்கு ஆயத் தமாவார். | 9.6.1<br>நன்கு திட்டமிட்டு சுய தகவல் கோவையொன்றினை பராமரித் துவருவதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • சுய தகவல் கோவையொன்றில் உள்ளடங்க வேண்டிய முக்கிய மான தகவல்கள்<br>• சுய தகவல்கள்<br>• சுய பண்புக்கூறுகள்<br>• சுய திறன்கள்<br>• சுய நடத்தைகள்<br>• பாடசாலையிலும் பாடசா லைக்கு அப்பாற்பட்ட வகை யிலும் பெறும் பொருத்தமான முன்அனுபவங்கள் | • தமது சுய பண்புக் கூறு களையும் திறன்களையும் நடத்தைகளையும் விவரிப் பார்.<br>• தமது உணர்வுகளையும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக்கொள்வார்.<br>• ஏனையோரின் கருத்துக் களை மதிப்பார்.<br>• சுய விவரங்களடங்கிய கோவையொன்றினைக் கட்டியெழுப்பிக் கொள் வார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • சுய விவரக்கோவை யொன்றினைப் பேணி வருவதன் மூலம் தம்மைப் பற்றிய மதிப்புணர்வைக் கட்டியெழுப்பிக் கொள் வார். | |
| | 9.6.2<br>நாட்டைக் கட்டியெழுப்பு வதில் பங்களிப்புச் செய்யும் வாண் மைகளை/ தொழில்களைப் பகுத்தாய்வார். | • நாட்டைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்யும் பல்வேறு தொழில் துறைகள்<br>• அரச/ தனியார் பொதுச் சேவை கள்/ தொண்டர் சேவைகள்/ சமூக நலன்புரிச் சேவைகள்<br>• சுயதொழில் புரிவோர், சேவை யாளர், சேவை வழங்குநர்<br>• உள்ளக, திறந்தவெளி நிரந்தரமான இடம்/ இடம்பெயர் (தற்காலிக)<br>• உயரிய, சராசரியான தொழில் சார் மட்டத்தில், தாழ்மட்டம் தொடக்கம் உயர் மட்டம் வரை யில் நிதிசார்ந்த எதிர்பார்ப்பு அல்லது மகிழ்ச்சி | • தாம் எதிர்பார்க்கும் தொழில் வாண்மை தொடர்பாகத் தேடியறி வார்.<br>• வெவ்வேறு தொழில்களுக் காகக் காணப்படும் விசேட கேள்வி மற்றும் இயல்புகள் தொடர்பாகப் பரிசீலிப்பார்.<br>• தொழில் மூலம் திருப்திய டைதலானது, அதன் மூலம் பெறும் நிதிசார்ந்த பிரதிபலனைப் போன்றே முக்கியமானது என்பதைக் கலந்துரையாடுவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • ஒவ்வொரு வாண்மைக்கும்/ தொழிலுக்கும் சமூகத்தில் பெறுமானமும் மகத்துவமும் உண்டு என்பது | • எந்தவொரு தொழிலும் நாட்டைக்கட்டியெழுப்பும் பங்களிப்புச் செய்யும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• ஒவ்வொரு தொழிலினதும் பெறுமானத்தையும் மகத்துவத்தையும் மதிப்பார். | |
| | 9.6.3<br>வெவ்வேறு தொழில்கள்/ வாண்மைகளுக்காக அணுகு வழிகளைத் தேடியாய்வார். | • வெவ்வேறு வாண்மைகள்/ தொழில்களை அணுகுதல்.<br>• பாடசாலையில்/ பாடங்களை பாடத்துறையைத் தெரிவு செய்து கொள்ளல்<br>• கல்விசார் தகைமைகள்/ தொழில்சார் தகைமைகள்<br>• முறைமையான/ சேவைக்காலத் தொழிற்பயிற்சி | • வாழ்க்கையில் வெற்றியடைவதற்காக கல்விசார்/ தொழில்சார் பயிற்சிகள் யாவை எனத் தேடியறிவார்.<br>• தொழில்சார்/ வாண்மைகள் இலக்குகளை அடைவதற்காக பல்வேறு வழிகள் உண்டு என்பதை விளக்குவார்.<br>• அடையத்தக்க தனிப்பட்ட இலக்குகளை அடைவதன் பெறுமானத்தை மதிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | • தமக்கு மிகப்பொருத்த மான பாடங்களை/ பாடத் துறையை/ பாடநெறிக ளைத் தெரிவு செய்து கொள்வார். | |
| | 9.6.4 தொழில்கள்/ வாண்மைகளுக்குத் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பா கத் தேடியறிவார். | • தொழில்சார் பிரவேசத்துக்குரிய பாடங்கள்/ பாடத்துறைகளைச் சரியாகத் தெரிவு செய்து கொள் வதன் முக்கியத்துவம்<br>• விசேட தொழில்கள்/ வாண்மை களுக்குரிய கல்விசார்ந்த, சம காலத்துக்கேற்ற உள, பௌதிக கேள்வி<br>• உயர்கல்வி மற்றும் மேலும் கல்வி தொடர்பான கற்கை நெறிகள்<br>• வெவ்வேறு தொழில்கள் வாண் மைகளுக்குரிய விடய அறிவை யும் அனுபவங்களையும் பெறுதல் | • தாம் பெரிதும் விரும்பும் வாண்மைக்கு தொழிலுக் குரிய சரியான பாடத்தை/ பாடங்களைத் தெரிவு செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• தெரிவு செய்து கொண்ட விசேட தொழிலுக்காக, நிறைவு செய்து கொள்ள வேண்டிய குறுகிய கால - நீண்ட கால தொழில் சார் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பாகத் தேடியறி வார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | உ-ம்:<br>- கடற்றொழில், கமத்தொழில் களின் ஈடுபடுதல்<br>- உணவு பானாதிகள் விற் பனை செய்தல் போன்றவை. | • தெரிவு செய்து கொண்ட தொழிலுக்காக, கல்விசார் தகைமைகளுக்கு மேலதி கமாக செய்முறை அறிவும் அனுபவங்களும் துணையாகும் விதத்தை விளக்குவார். | |
| | 9.6.5<br>உயரிய மட்டத்தில் தயாரிக் கப்பட்ட சுயவிவரக் கோவை யொன்றினைப் பேணிவருவதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • சுய விபரக்கோவையொன்றில் (Bio-data) உள்ளடக்க வேண்டிய முக்கியமான விடயங்கள்<br>உ-ம்:<br>- தனிப்பட்ட தகவல்கள்<br>- கல்வித்தகைமைகள்<br>- பொருத்தமான அனுபவங்கள்<br>- முன்னர் செய்த தொழில்கள் தொடர்பான தகவல்கள்<br>- திறன்கள், பண்புக்கூறுகள்<br>- பெற்ற வெற்றிகள்<br>- தமது தகவல்களை விசாரித் தறிவதற்காக நாடத்தக்க தனியாட்கள் | • மிகத் தெளிவான, முறை மையான சுயவிவரக் கோவையொன்றில் அடங் கியிருக்க வேண்டிய விட யங்களைப் பரிசீலிப்பார்.<br>• தொழில் வழங்குனரின் கவனத்தை ஈர்க்கத்தக்க வாறான சுயவிவரக் கோவையொன்றினைத் தயாரித்துக் கொள்ளல் தொடர்பான அறிவூட்டம் பெறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • ஏனையோரின் சுயவிவரக் கோவைகளுடன் ஒப்பிடுகையில் தமது சுயவிவரக்கோவையின் சிறப்பியல்பு | | |
| | 9.6.6<br>தொழில் விண்ணப்பப் படிவமொன்றினைச் சரியாகப் பூர்த்தி செய்யும் விதத்தை விளங்கிக் கொள்வார். | • முதலில் விண்ணப்பப்படிவத்தின் வரைவுப் பிரதியொன்றினைப் பூர்த்தி செய்வதன் முக்கியத்துவம்<br>• விண்ணப்பிக்கும் தொழிலுக்கேற்ப சரியான தகவல்களை உள்ளடக்கும் விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தல்<br>• ஏனையோரின் விண்ணப்பப்படிவங்களுக்கு இடையே தமது விண்ணப்பப்படிவத்தை இனங்கண்டு கொள்வதற்காக சொந்தத் தகவல்களை வழங்குதல்<br>உ-ம்:<br>- தொழில் சார்பாகத் தனிப்பட்ட ஆர்வங்களும் பொழுது போக்குகளும் | • விண்ணப்பப்படிவமொன்றினைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தும் நேரம் பயன்மிக்க நேரம் ஆகும் என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• பயன்மிக்க தொழில் விண்ணப்பபடிவமொன்றில் அடங்க வேண்டிய விடயங்களைத் தெளிவாக விளக்குவார்.<br>• விண்ணபடிவத்தின் அமைப்பும் தகவல்களை முன்வைக்கும் விதமும் தொழில்வழங்குநரின் நேர் முகப்பரீட்சைச் சபை மீது உடன்பாடான வகையில் | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள இடைவெளிகளைப் புத்திசாலித்தனமாகப் பூர்த்தி செய்தல், சுயவிவரக்கோவையையும் இணைத்தல்<br>• விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தல் | செல்வாக்குச் செலுத்துகின்றமையை விளக்குவார்.<br>• விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்படிவத்தை முன் வைப்பதன் முக்கியத்துவத்தை விவரிப்பார். | |
| | 9.6.7<br>தொழில் வெற்றிடமொன்றுக்காக, எழுதும் கடிதமொன்றில் அடங்கியிருக்க வேண்டிய படி முறைகளைப் பகுத்தாய்வார். | • விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கும் கடிதத்தின் வரைவுப் பிரதியொன்றினைத் தயாரிப்பதன் முக்கியத்துவம்<br>• உள்ளடக்கத்தைத் தருக்கரீதியில் வரிசைப்படுத்தல்<br>• தேவையான மிக முக்கியமான தகவல்கள், கல்வித்தகைமைகள், பொருத்தமான அறிவுறுத்தல்கள், ஆர்வங்கள், பொழுதுபோக்குகள் | • விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்பும் கடிதத்தின் வரைவுப் பிரதியைத் தயாரிப்பதற்காகச் செலவிடும் நேரம் பயன்மிக்க நேரமாகும் என்பதை விவரிப்பார்.<br>• பயன்மிக்க கடிதமொன்றில் அடங்கியிருக்க வேண்டிய விடயங்கள் பற்றி விளக்குவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அறிவித்தலில் தரப்பட்டுள்ள சகல அம்சங்கள் தொடர்பாகவும் தகவல்களை வழங்குதல்<br>• விண்ணப்படிவத்தை முன்வைத்தல்<br>• ஏனையோரின் விண்ணப்பப்பத்திரங்களிலிருந்து தமது விண்ணப்படிவம் தெள்ளத்தெளிவாக வேறுபட்டுத் தெரியுமாறு முக்கியமான தகவல்களை முன்வைத்தல்<br>• விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்பவடித்தை முன்வைத்தல் | • அறிவித்தலின்படி விண்ணப்படிவத்தின் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும் என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• தகவல்களை முன்வைக்க வேண்டிய விதத்தையும் அது தொழில் வழங்குநரிடத்தே உடன்பாடான தாக்கத்தை விளைவிக்கும் விதத்தை விவரிப்பார்.<br>• விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் இணைப்புக் கடிதத்தை எழுதிப் பூர்த்தி செய்து விண்ணப்படிவத்துடன் இணைந்து அனுப்புவதன் அவசியத்தை விளக்குவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.6.8<br>நேர்முகப்பரீட்சைகளை எதிர்கொள்ளும் திறன்களின் முக்கியத்துவத்தைக் கிரகித்துக் கொள்வார். | • நேர்முகப்பரீட்சைகளை எதிர் கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ளல்<br>உ-ம்:<br>வினாவல் பூர்த்தியடையும் வரை பொறுமையாகச் செவிமடுத்து, குறித்த வினாவுக்குரிய விடையை முன்வைத்தல்<br>• வினா பற்றி நன்கு சிந்தித்து, நேர்மையாகப் பதிலளித்தல்<br>• மொழியைக் கவனமாகப் பயன் படுத்தல்<br>• நேர்முகப்பரீட்சைக் சபையினரின் வினாகேட்க ஆயத்தமாக இருத் தல் (தெளிவு பெறுவதற்காக)<br>• மனக்குழப்ப நிலைமைகளின் போது அடக்கமாக இருத்தல்<br>• பின்னூட்டல் பெற்றும் அதற்கமை யச் செயற்படலும்<br>• நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவ தற்காக நன்கு ஆயத்தமாதல் | • நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் திறன்களை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• தெளிவாக விடையளிப் பதற்காக வினாவை நன்கு செவிமடுப்பதன் அவசி யத்தை விளங்கிக் கொள்வார்.<br>• விடைகளை சுருக்கமாக வும் தெளிவாகவும் முன் வைப்பதன் அவசியத்தை விளக்குவார்.<br>• நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பமானது, பொதுவாக, உள நெருக் கிடையை ஏற்படுத்தத்தக்க ஒன்றாகும் என்பதை விளங்கி, வினவப்படும் வினாக்களுக்கு நிதானமா கப் பதிலளிப்பதன் அவசியத்தை மதிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • சந்தர்ப்பம் கிடைக்குமாயின் வினாக்கள் வினவ ஆயத்தமாக இருப்பதன் அவசியத்தை விளங்கிக் கொள்வார்.<br>• பின்னூட்டல் பெறுவதன் அவசியத்தையும் அதற்கமையச் செயற்படுவதன் அனுகூலத்தையும் விளக்குவார்.<br>• நேர்முகப் பரீட்சையின் வெற்றியானது, முன்னாயத்தத்தின் மீது தங்கியுள்ளமையை விளக்குவார்.<br>• விண்ணப்பித்துள்ள தொழிலின் தன்மைக்கு அமைய நேர்முகப் பரீட்சையின் போது 'வினவப்படலாம்' என எதிர்பார்க்கப்படும் வினாக்கள் குறித்துக் கலந்துரையாடுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.6.9<br>நேர்முகப் பரீட்சையை நன்கு எதிர்கொள்ளுவதன் முக்கியத்து வத்தை மதிப்பார். | • நேர்முகப்பரீட்சைக்குத் தோற்று தல்<br>⋆ (தனிப்பட்ட) புறத்தோற்றம், தலைமயிர்களின் தன்மை, ஒப்பனை (Makeup), ஆடை யணி<br>⋆ மேனிமொழி (Body Language) அமர்தல், கண்ணோடு - கண் தொடர்பு (Eye Contact) முகபாவனை, கைகளின் அசைவு (Use of hands)<br>• கவனமும் ஆர்வமும்<br>• பேச்சு, மொழிப்பயன்பாடு<br>• மரியாதை பேணல் | • நேர்முகப்பரீட்சையின் போது தமது தனிப்பட்ட தோற்றம் தொழில் வழங்கு நர்க்கும் நேர் முகப்பரீட்சைக் சபையின ருக்கும் முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்வார்.<br>• முதல் முதலில் தோற்றும் உணர்வு, நீண்டகால ரீதியில் முக்கியத்துவமு டையது என்பதைக் கலந் துரையாடுவார்.<br>• கவனத்தை ஈர்ப்பதற்காக மேனிமொழி (Body Language) முக்கியத்துவம் பெறுகின்றமையை மதிப்பார்.<br>• வினாக்களுக்குரிய சரி யான விடைகளை நன்கு ஒழுங்கு செய்து நேர் முகப்பரீட்சைச் சபையின்/ தொழில் வழங்குனர் முன்னால் சமர்ப்பிப்பதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • நேர்முகப்பரீட்சையின் போது மரியாதையான நடத்தை குறித்து அவதானிக்கப்படும் என்பதை விளங்கிக் கொள்வார். | |
| | 9.6.10<br>நேரத்தைச் சீராக முகாமை செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • சேவை வழங்குபவர் என்ற வகையில் நேரத்தை நன்கு முகாமை செய்வதன் முக்கியத்துவம்<br>• செய்ய வேண்டிய வேலைகளை அவற்றின் முன்னுரிமை ஒழுங்குப்படி வரிசைப்படுத்திக் கொள்ளல்<br>• கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய நேரம், வேலைகள் செய்வதற்குரிய நேரம், தனிப்பட்ட நேரம்<br>• விளைதிறன் மற்றும் வினைத்திறன் தொடர்பாக தொழில் வழங்குநரின் கவனம் | • தொழில் செய்யும் இடத்தில் நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• செய்ய வேண்டிய வேலைகளை முன்னுரிமை ஒழுங்கின்படி வரிசைப்படுத்திக் கொள்வதன் அவசியத்தை கலந்துரையாடுவார்.<br>• தனிப்பட்ட வேலைகள், பயிற்சி, வேலைகளைச் செய்தல் ஆகியவற்றுக்காக நேரத்தை ஒதுக்கிக் கொள்வதன் அவசியத்தை மதிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • சேவை வழங்குநர்க்கு வழங்கப்படும் நதிசார்ந்த பிரதிபலன்களுக்குப் போதுமானவாறு சேவை களைப் பெறும் உரிமை தொழில் வழங்குநருக்கு உண்டு என்பதை விளங் கிக் கொள்வார்.<br>• சேவை வழங்குநர் தொடர் பாக, தொழில் வழங்குநர் கொண்டிருக்கும் கருத்து நிறுவனத்தின் முன்னேற்றத் தின்மீது எவ்வாறு செல் வாக்கு செலுத்தும் என விசாரணை செய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.6.11<br>எப்போதும் நல்ல நடத்தையை வெளிக்காட்டுவதன் அவசியத்தை மதிப்பார். | • தனிப்பட்ட நடத்தை<br>• நடத்தை சார்பான சாதகமான வகையிலோ பாதகமான வகையிலோ ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்துதலும் தம்மீது ஏனையோரின் செல்வாக்குகளும்<br>• திருப்தியற்ற நடந்தை அறிக்கைகள் காரணமாக தொழில்சார்ந்த விருத்தியின் மீது ஏற்படும் மதிப்புகள்<br>• நேரந்தவறாது வேலையிடத்துக்கு வருதலும் வேலையில் ஈடுபடுதலும்<br>• மனித வளக்குறைபாடு/ உற்பத்தி மட்டக்குறைபாடு போன்ற நிலைமைகளின்போது சுய விருப்புடன் உதவி செய்தல் | • தொழில்வாக்குமிடத்தில் ஒவ்வொரு வேலை தொடர்பாகவும் தெளிவான விளக்கத்துடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• சில வகைத் தொழில்களில் ஈடுபடுதலானது தொழில் வாழ்க்கையின் பின்னரும் பாதகமான விளைவுகள் ஏற்பட காரணமாக இடமுண்டு என்பதை விளக்குவார்.<br>• தொழில்பார்க்கும் இடத்தில் அனைவரையும் சமமாக மதிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• தமது செயல்கள் ஏனையோர் மீது சாதனமான வகையிலும் பாதகமான வகையிலும் செல்வாக்குச் செலத்த இடமுண்டு என் | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | பதையும் அவ்வாறாகவே ஏனையோரின் செயல்கள் தம் மீது சாதனமான வகை யிலும் பாதகமான வகையிலும் செல்வாக்குச் செலுத்த இடமுண்டு என்பதையும் கலந்துரையாடுவார்.<br>• தொழில்பார்க்கும் இடத்தில் யாதேனும் நெருக்கிடையான சந்தர்ப்பங்களில் சேவை வழங்கும் போது சேவையை வழங்குவது ஒரு நல்ல கூட்டான செயலாவதோடு அதனை விருப்புடனும் அறிவூட்டத்துடன் செய்ய வேண்டும் என்பதை மதிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.6.12<br>சரியான தனிப்பட்ட நிதி முகாமை தொடர்பாக தேடியறிவார். | • வருமானமும் செலவும்<br>• வருமானத்தை/ சம்பளத்தை/ பணத்தைக் காரணமாகக் கையாளல்<br>• பொதுவான மற்றும் அவசர நிலைமைகளின் போது பணத்தைப் பயன்படுத்தல்<br>• வங்கிக் கணக்கொன்றினைத் தொடங்குதலும் நடத்திச் செல்லலும்<br>• எதிர்காலத்துக்காகச் சேமித்தல்<br>• கடன் கொடுக்கல் வாங்கல்கள்/ கடன் பளுவுக்கு ஆளாவதைத் தவிர்த்துக் கொள்வார்.<br>• கடன் அட்டைகளின் (Credit Card) அனுகூலங்களும் பிரதிகூலங்களும்<br>• எதிர்காலத்திக்காக முதலீடு செய்தல் அல்லது சேமித்தல்<br>• வயோதிபப் பருவத்துக்காக/ ஓய்வூதியத்துக்காக | • தனிப்பட்ட நிதிமுகாமையின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• வரவு - செலவைத் தமது வருமானத்துக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதன் அவசியத்தை மதிப்பார்.<br>• வழமைப்படி சேமிப்பதால் கிடைக்கும் அனுகூலங்களை மதிப்பார்.<br>• கடனாளியாதல், கடனட்டைப் பயன்பாடு ஆகியற்றினர் ஏற்பட்ட அபாயத்தை விளங்கிக் கொள்வார்.<br>• சேவையிலிருந்து நீங்க முன்னர், எதிர்காலத்தின் பாதுகாப்புக்காக பணத்தைச் சேமித்து வைப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • ஓய்வூதியத்தைப் பயன் படுத்த வேண்டியவற்றை யும் அவ்வாறான ஓய்வூ தியமேதும் இல்லாத சந் தர்ப்பங்களில் பணத்தைக் கையாள வேண்டிய விதத்தையும் விவரிப்பார். | |
| | 9.6.13<br>தொழில் வாழ்க்கையையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் சமனிலையாகப் பேணி வருவதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • வேலைகளின்போது பொருத்த மான வேலைச்சேர்மானத்தைப் பேணிவருவதன் முக்கியத்துவம்<br>• எதிர்காலத்துக்காக வேலைப் பயிற்சி, விளையாட்டு ஓய்வு குடும்பத்துடனும் உறுப்பினரு டனும் தனிப்பட்ட வகையிலும் ஓய்வு நேரத்தைக் கழிப்பதன் முக்கியத்துவம்<br>• பணத்தட்டுப்பாடு எதிர்நோக்கப் படும் வேளைகளில் ஆலோசனை பெற நாடத்தக்க தரப்பினர் உதா: பெற்றார் | • தொழில்வாழ்க்கையை யும் சமூக வாழ்க்கையை யும் சமனிலையாகப் பேணிவருவதன் முக்கி யத்துவத்தை விவரிப்பார்.<br>• நிதி நெருக்கடிகளின் போது செயற்பட வேண் டிய விதம் தொடர்பாகக் கலந்துரையாடுவார். | 01 |

## 4.0 கற்றல் கற்பித்தல் முறையியல்

குடியியற் கல்வி எனும் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பாடத்தின் ஊடாக அடைய எதிர்பார்க்கும் தேர்ச்சிகளை எட்டுவதற்குப் பொருத்தமான பிரயோக கற்பித்தல் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வதற்கான வசதி செய்து கொடுப்பவராக ஆசிரியர் செயற்படுவது மிக முக்கியமானது. இதற்காக விரிவுரைமுறைபோன்ற மரபு ரீதியான கற்றல் கற்பித்தல் முறைகளுக்குப் பதிலாக உயிரோட்டான சமூக அனுபவங்களை வழங்குவதன் மூலம் பாட விடயங்களைக் கற்பதில் மாணவரை ஈடுபடுத்துவது இன்றியமையாதது.

கற்றலுக்காக வசதி செய்து கொடுப்பவர் என்ற வகையில் பல்வேறு வளங்களைப் பயன்படுத்தி, மாணவரிடத்தே எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான கற்றல் நிகழ்ச்சிகளை திட்டமிட்டுக் கொள்வதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் நிதமும் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

குடியியற் கல்விப் பாடம் சார்ந்த அறிவைத் தேடிப்பெறுவதற்காக மாணவரை வழிப்படுத்துதலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் நற்பிரசைக்குரிய மனப்பாங்குகளையும் திறன்களையும் விருத்தி செய்வதும் ஆசிரிய வகிபாகத்தின் அடிப்படையான கடமையும் பொறுப்பும் ஆகும். இதற்காக நற்பிரசைகளை நாட்டுக்கு வழங்குதல் எனும் பொறுப்புடன் இணைந்த ஒழுக்கக் கோவையொன்றினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுதல் மிக முக்கியமானது.

பாடத்திட்டத்தையும் ஆசிரியர் கைந்நூலையும் நன்கு கற்றாய்ந்து தேசிய குறிக்கோள்கள், பாடக் குறிக்கோள்கள், பாடத் தேர்ச்சிகள், விடய உள்ளடக்கம் ஆகியவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்பைத் தெளிவாக விளங்கி, பெரிதும் பொருத்தமான மாணவர் மையக் கற்றல் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவதில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

ஒருவரையொருவர் விஞ்சி, போட்டியிட்டு, பரீட்சையை மனதிற்கொண்டு தன்னலத்துடன் கற்றலில் ஈடுபடுவதை விட ஒற்றுமையாகவும் சகவாழ்வுடனும் சகோதரத்துடனும் கற்றல் கருமங்களில் ஈடுபடுவதற்கு மாணவரை வழிப்படுத்துதல் வேண்டும். ஒத்துழைப்பையும் சகவாழ்வையும் அடிப்படையாகக் கொண்ட அமைதியான மக்கட் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு அது ஏதுவாகும்.

அதற்கமைய குடியியற் கல்விப் பாடத்தைக் கற்பிப்பதற்காகப் பயன்படுத்தத்தக்க சில கற்றல் - கற்பித்தல் முறையியல்கள் உதாரணத்துக்காகக் கீழே தரப்பட்டுள்ளன.

- தேடியறிதல்
- கண்காட்சி
- களப்பிரயாணம்
- வகிபாகமேற்று நடித்தல்
- குழுக்கலந்துரையாடல்
- விவாதம்
- வினா - விடை நிகழ்ச்சி
- குழுச் செயற்பாடுகள்/ தனியாள் செயற்பாடுகள்
- செயலடைவுக்கோவை
- சுவரேடு
- மாணவர் பாராளுமன்றம்
- அளிக்கை
- நலன்புரிச் சங்கம்/ சமூக நலனோம்பல்/ படைப்பெருமைமிக்கவை
- சிரமதானம் (உ-ம்: அனர்த்த முகாமைப்பணிகள், நலனோம்பல் போன்றவற்றில் பங்குபற்றல்)

பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்குப் பொருத்தமானவாறாக மேற்படி கற்றல் கற்பித்தல் முறைகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதலானது கற்றல் கற்பித்தற் செயன்முறையின் தரமேம்பாட்டுக்குப் பெரிதும் துணையாகும்.

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தேசியத் தேவைகளுடன் பொருந்தும் வகையிலான நற்பிரசைகளைச் சமூகத்துக்கு அளிப்பது பாடசாலை சமூகத்தின் பொறுப்பாகும். அந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே பாடசாலைக் கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் சகல செயற்பாடுகளும் மேற்படி குறிக்கோளை அடைவதில் பங்களிப்புச் செய்யும். இக்குறிக்கோள்களை அடைவதற்காக குடியியற் கல்விப் பாடத்தின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

குடும்ப அலகின் ஓர் உறுப்பினர் என்ற வகையிலும் பாடசாலையின் ஓர் உறுப்பினர் என்ற வகையிலும் மக்கட் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையிலும் ஒரு பூகோளப் பிரசை என்ற வகையிலும் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு, 6 - 11 ஆந் தரங்களுக்குரிய குடியியற் கல்விப்பாடத்திட்டம் (கலைத்திட்டம்) தயாரிக்கப்பட்டுள்ளது.

குடியியற் கல்விப் பாடத்தினால் அடைய எதிர்பார்க்கும் தேர்ச்சிகளையும் தேர்ச்சி மட்டங்களையும் வெற்றிகரமாக அடைவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், சரியான வழிகாட்டல், கற்றல் கற்பித்தல் செயன்முறையை மதிப்பிடுதல் ஆகியவற்றுக்காக பாடசாலைக் கொள்கைகளையும் வேலைத்திடடங்களையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது இன்றியமையாதது. அதற்கமைய குடியியற் கல்விப்பாடத்தைப் பாடசாலைக் கலைத்திட்டங்களும் விதந்துரைக்கப்படுகின்றன. பின்வரும் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் விதந்துரைக்கப்படுகின்றன.

- வெளிக்கள நிகழ்ச்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள் ஒழுங்கு செய்தல்.
- சிறிய அளவிலான ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.
- வினா - விடை நிகழ்ச்சிகள், விவாதங்கள் நடத்துதல்.
- சுவரேடு மற்றும் பருவ கால வெளியீடுகள் வெளியிடுதல்.
- வளவாளர்களின் பங்களிப்புடன் செயலமர்வுகள் நடத்துதல்.
- மனித உரிமைகளை அனுபவத்திலும் அதனுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்றுவதன் ஊடாக மனித கௌரவம் தொடர்பான நன்மனப்பாங்ககளையும் திறன்களையும் விருத்தி செய்தலுக்கான வேலைத்திட்டங்களைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தல்.
- வேலையுலகில் பயன்மிக்க ஒரு உழைப்பாளியாகச் செயற்படுவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்காக தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- அனர்த்த முகாமை தொடர்பான அறிவு, திறன்களை முன்வைத்தல், பயிற்சிகளின் (Mock drill) ஊடாக இற்றைப்படுத்தல் (Update).
- ஒழுக்கமிக்க, சட்டத்தை மதிக்கும் பிரசைகளை உருவாக்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு சார்ந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- தனியாள் விருத்தி மற்றும் தலைமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- மாணவர் பாராளுமன்றத்தை பாடசாலையில் நடைமுறைப்படுத்தல்.
- மாணவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரசைகளை விளைதிறனான வகையில் தீர்த்துக்கொள்வதற்குரிய தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்காக ஆலோசனைச் சேவை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலாகும்.
- பண்பாட்டுப் பரிமாற்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- பாட இணை வேலைத்திட்டங்களைப் பாடசாலை நாட்காட்டியில் உள்ளடக்கதலும் அவற்றை வினைத்திறனானவாறு நடைமுறைப்படுத்துதலும் (உ-ம்: உலக சிறுவர் தினம், உலக ஆசிரியர் தினம், முதியோர் தினம், வெவ்வேறு பண்பாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உற்சவங்கள் பண்டிகைகள்)
- பிரதேசத்தில் காணப்படும் ஏனைய அரச, தனியார், தன்னார்வ அமைப்புக்களுடன் தேவையான சந்தர்ப்பங்களில் இணைத்து செயற்படச் சந்தர்ப்பமளித்தல்.
- பாடப் பொறுப்பாசிரியர்களின் ஈடுபாட்டுடன் இப்பணிகளைத் திட்டமிட்டு வினைதிறனானவாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாடக்குறிக்கோள்களை எட்டுவதற்கும் மாணவர் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கும் ஆவன செய்தல் இன்றியமையாதது.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்ட மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின்கீழ் அந்தந்தத் தவணைக்குரிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களம் உள்ளடங்குமாறு கற்றல் கற்பித்தல், மதிப்பீட்டுக் கருவிகளை ஆக்கபூர்வமான வகையில் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாக கணிப்பீடு - மதிப்பீட்டை நடத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தந்தப் பாடசாலைத் தவணையின் இறுதியில் பாடசாலை மட்டத்தில் தவணைப் பரீட்சை நடத்த ஆவன செய்வதும் அவசியமாகும்.

## பாடத்திட்ட கலைத்திட்டக்குழு

**உள்வாரி**

| | | |
|---|---|---|
| திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம | சிரேஷ்ட விரிவுரையாளர் | சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம |
| திருமதி. எஸ்.யூ.அய்.கே. த சில்வா | விரிவுரையாளர் | சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம |

**வெளிவாரி**

| | | |
|---|---|---|
| திரு. சீ.எஸ். ஜயசிங்ஹ | ஆசிரியர் நிலைய முகாமையாளர் (ஓய்வு பெற்ற) | ஹொரண |
| திருமதி. பீ.டீ. சோமாவதி | ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் | புளத்சிங்ஹள |
| திருமதி. டீ.என். ஜயாங்கனி | உப அதிபர் | மஹரகம ம.ம.வி. மஹரகம |
| கலாநிதி. ஷாமிந்த வனசிங்ஹ | விரிவுரையாளர் | இலங்கை திறந்த பல்கலைக்கழம், நுகேகொடை |
| திரு. எம்.கே.கே. பிரியந்த | விரிவுரையாளர் | உருகுணை தேசிய கல்வியியற் கல்லூரி, வலஹன்துவை, காலி |
| திரு. கே.ஏ.என். புஷ்பகுமார | ஆசிரியர் சேவை | பொலேகொட ம.வி. மஹகம |
| திரு. எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, | தேசிய கல்வி நிறுவகம் |